28.01.2026

அ.வ.எண். 111/2018

பி.சா.1 – திரு.சதிஷ்பாபு, த/பெ.நடராஜன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 28.01.2026 is accordance with the provision of Act X of 3331

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்து சம்பந்தமாக 2018 ம் ஆண்டுவரை பட்டா, சிட்டா, வருவாய் ஆவணங்கள் ரங்கசாமி கவுண்டர் மற்றும் 1 ம் வாதி பெயரிலும், 1 ம் பிரதிவாதி நடராஜன் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு ரங்கசாமி கவுண்டரின் 2 மகள்கள் மற்றும் 2 மகன்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ரங்கசாமி கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் சரியாக தெரியவில்லை. ரங்கசாமி கவுண்டர் இறந்த பின்னிட்டு, 2018 ம் வருடத்திற்கு பின்னிட்டு தான் மேற்படி நபர்களை சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ் அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் ஏற்பட்ட பிழையை தெரிந்துகொண்டு 2018 ம் ஆண்டுக்கு பின்னிட்டு என் அத்தைகளின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் என் தாத்தா நால்வருக்கும் சரியாக பிரித்து வைத்து கொள்ளுங்கள் என சொன்னார். என் தாத்தா சொல்வதாக சொல்லும் 1991 காலகட்டத்தில் எனக்கு 6 வயது என்றால் சரிதான், எனக்கு என் அப்பா, அத்தைகள் 2 பேர், சுப்பையன் சொல்லி தெரியும். நான் சொல்வது உண்மையாக இருந்தால், ரங்கசாமி கவுண்டர் இறந்தவுடன் வருவாய் ஆவணங்களில் பெயர் சேர்த்திருப்பேன் என்றால் யார் , யாருக்கு என்னென்ன பங்கு என்று பேசி பிரித்துகொள்ளலாம் என இவ்வளவு நாள் சண்டை இருந்தது.

3. 2, 3 பிரதிவாதிகள், 1 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்திகொடுத்த வா.சா.ஆ.3 விடுதலை பத்திரம் ஆனது தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என் அத்தைகளுக்கு தாத்தா சொத்தில் எவ்வித பங்கும் கொடுக்கவில்லை, அதனால் என் அத்தைகளுக்கு ஆளுக்கும் ரூ.2,00,000/- பணம் கொடுத்து விடுதலை பத்திரம்

எழுதிக்கொண்டோம். விடுதலை பத்திரத்தில் ஒரு க.ச.எண். மட்டும் குறிப்பிட்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். அதில் பிழை ஏற்பட்டதாக 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு ஒரு பிழைதிருத்தல் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில், சுமார் 30 க.ச.எண்கள் கொண்ட சொத்துக்கள் பிரிக்கப்பட்டது என்றால் இருக்கலாம். 30 க.ச.எண்கள் கொண்ட பாகப்பிரிவினை என்பதால், அதிலும் பிழை ஏற்படுவது சகஜம் என்றால் அது பற்றி தெரியவில்லை.

4. வா.சா.ஆ.1 ஆவணத்தில், A அட்டவணை சொத்துக்கள் ரங்கசாமி கவுண்டருக்கும் மற்றும் பொது ஷராவாக ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான், அது எங்களுடைய பூர்வீக சொத்து என்பதால் அது பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்தானது என் தாத்தாவின் சுய சம்பாத்திய சொத்து ஆகும். வா.சா. ஆ. 1 ஆவணத்தில், க.ச.எண்.148/2F ல் ஒரு பகுதி, 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், பாதி என் தகப்பனார் பெயரிலும், பாதி என் தாத்தாவின் பெயரிலும் இருந்தது. வா.சா.ஆ.1 ஆவணத்தில், பாதி என் தாத்தாவின் பெயரில் இருந்தது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தில், தட்டச்சு பிழையை பயன்படுத்தி மோசடியாக வா.சா.ஆ.3 (பாகபாத்திய விடுதலை பத்திரம்), வா.சா.ஆ.4 (பிழைதிருத்தல் பத்திரம்) ஆகிய ஆவணங்களை பிரதிவாதிகள் ஏற்படுத்தி உள்ளனர் என்றால் சரியல்ல. உரிய ஆவணங்கள் கொண்டு பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur